

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்து உரையாற்றினார். இந்த விழாவில், ஒன்றிய முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர், பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். மாங்குடி, தமிழரசி, டாக்டர் வி. முத்துராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க. ரவி, பதிவாளர் முனைவர் அ. செந்தில்ராஜன் மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், ஒன்றிய முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியிலிருந்து 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த விழாவில், ஒன்றிய முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம்,சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.மாங்குடி, தமிழரசி, டாக்டர் வி.முத்துராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி, பதிவாளர் முனைவர் அ.செந்தில்ராஜன் மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.1.2025) காரைக்குடியில், சிவகங்கை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 30,000 பேருக்கு நலஉதவிகள் – ரூ.6184 கோடி வளர்ச்சித் திட்டப் பணிகள் துவக்கி வைக்க

# நெல்லை மாவட்டத்திற்கு வருகை தரும் முதல்வர் நிகழ்ச்சிகளுக்கான முன்னேற்பாடுப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு!

நெல்லை, ஜன. 23 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 06.02.2025, 07.02.2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து 30,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது உள்பட 6184.46 கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு தெரிவித்தார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 06.02.2025, 07.02.2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சி களில் கலந்து கொள்வதற்காக வருகை தருகிறார்கள். அதற்கான முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் .

நிகழ்ச்சிக்கான இடத்தை மாவட்ட ஆட்சியர் மருத்துவர். கா.ப. கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து விமானம் மூலம் பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி மதியம் 11 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகை தருகிறார். தொடர்ந்து நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள டாடா சோலார் நிறுவனத்தினை பார்வையிட்டு திறந்து வைக்கிறார்கள்.

அதன் பின்னர் கங்கை கொண்டான் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசின் உணவு பதப்படுத்தும் மையத்தினை திறந்து வைக்கிறார். பின்னர் நெல்லை மாநகர பகுதிகளில் கட்டப்பட்டுள்ள சந்தை கட்டிடங்களை திறந்து வைத்து தொடர்ந்து கழக நிர்வாகிகளை சந்தித்து முதல்வர் அவர்கள் ஆலோசனை நடத்துகிறார்கள்.

இந்த இரண்டு நாள் நிகழ்வில் தமிழ்நாட்டின் முதல் நதிநீர் இணைப்பு திட்டமான தாமிரபரணி நம்பியாறு கருமேனி ஆறு இணைப்பு திட்டத்தினை விவசாயிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கிறார். தொடர்ந்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நிகழ்ச்சி யில் 30,000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை சுமார் 203.71 கோடி ரூபாய் மதிப்பில் வழங்குகிறார்.அன்றைய தினம் மதியம் சென்னைக்கு விமான மூலம் முதலமைச்சர் அவர்கள் புறப்பட்டு செல்கிறார். ஆறு மற்றும் ஏழு ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சி யில் தமிழக முதலமைச்சர் 6184.46 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்குதல்,புதிய திட்டங்களை தொடங்கி வைத்தல், புதிய தொழில் நிறுவனங்களை திறந்து வைத்தல் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள்.

நகர்ப்புற பகுதிகளில் தாமதமாக வரி செலுத்துவோருக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருவது தொடர்பாக முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அதற்கான தீர்வு விரைவில் காணப்படும்.ஒன்றிய அரசு அனுமதித்தால் மட்டுமே மாநில அரசு கடன் வாங்க முடியும்.கடனை வாங்கி திருப்பி கட்டுவதற்கான திறன் இருந்தால் மட்டுமே கடன் வாங்குவதற்கான அனுமதியை ஒன்றிய அரசு வழங்கும். ஒரு மணி நேரம் செய்தியாளர்களை சந்தித்து நிதி அமைச்சர் கடன் சுமையில் தமிழ்நாடு அரசு இருக்கிறது என எதிர் கட்சித் தலைவர் தெரிவித்ததற்கு விளக்க த்தினை அளித்துள்ளார். தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செய்து கொண்டு வருவதால் செலவாகிறது வரவு வருவதால் அதனை மீண்டும் கட்டி வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துசெல்வி, மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன், சுரேஷ், கிரிஜா குமார்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு, மாநகராட்சி ஆணையர் என்.ஓ. சுகபுத்ரா, மாநகர காவல் ஆணையர் சந்தோஷ் ஹதிமணி உள்பட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஒரு நாள் பயிற்சி வகுப்பு

# தொழில்முனைவோருக்கான "ChatGPT"!

## கோவையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜன. 23 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஒரு நாள் பயிற்சி வகுப்பு "தொழில்முனைவோருக்கான ChatGPT" பயிற்சி வரும் 31.01.2025 தேதி நடைபெற உள்ளது. பயிற்சி நடைபெறும் இடம்: பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மாவட்டம்.

தொழில்முனைவோர், சிறு மற்றும் நடுத்தர வணிக உரிமையாளர்கள் மற்றும் ஸ்டார்ட்அப் நிறுவுநர்களுக்கு, ChatGPTஐ பயன்படுத்தி வணிக செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும், திறன்மேம்படுத்தவும், செலவுகளை குறைக்கவும் உதவும் தகவல்கள் மற்றும் நடைமுறை பயிற்சிகளை இந்த பயிற்சி வகுப்பு வழங்கும்.

பயிற்சியில் இடம் பெறும் தலைப்புகள்

- ChatGPT அறிமுகம் மற்றும் ப்ராம்ப்ட் நுணுக்க;நகள்: ChatGPTஇன் திறன்கள் மற்றும் வணிக தேவைகளுக்கேற்ப பொருத்தமான ப்ராம்ப்ட்டுகளை எழுதும் திறன்களை கற்றுக்கொள்ளுங்கள்.
- தெளிவான இலக்கு நிர்ணயம்: ChatGPTஇன் உதவியுடன் உங்கள் நோக்கம் மற்றும் இலக்குகளை சரியான வழியில் அமைக்கவும், செயல்படுத்தவும் கற்றுக்கொள்ளுங்கள்.
- மார்க்கெட்டிங் மற்றும் பிராண்டிங் யுக்திகள்: ChatGPTஐ பயன்படுத்தி புதுமையான மார்க்கெட்டிங் மற்றும் சமூக ஊடக திட்டமிடல் உத்திகளை கற்றுக்கொள்ளுங்கள்.
- கான்டென்ட் உருவாக்கம் மற்றும் வாடிக்கையாளர் ஈர்ப்பு: தாக்கம் செய்கிற கான்டென்ட் உருவாக்கவும், வாடிக்கையாளர்களுடன் உரையாடலை மேம்படுத்தவும் AI கருவிகளை பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்.
- செயல்திறன் கண்காணிப்பு மற்றும் அளவீட்டு உத்திகள்: வணிக செயல்திறனை துல்லியமாக கண்காணிக்கவும், ChatGPTஐ பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யவும் கற்றுக்கொள்ளுங்கள்.
- நேரடி சிக்கல் தீர்வு: இடுகையாளர் எதிர்கொள்ளும் தொழில்முனைப்பு சவால்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அமர்வில், ChatGPT மூலம் தீர்வுகளை கண்டுபிடிக்கவும்.

பங்கேற்பாளர்கள் 100க்கு மேற்பட்ட செயல்திறன் கொண்ட ChatGPT ப்ராம்ப்ட்டுகளுடன் ஒரு பிரத்யேக மின்புத்தகத்தையும், அன்றாட ப்ராம்ப்ட் வழிகாட்டுதல்கள் மற்றும் புதுப்பிப்புகளுக்கான ஒற்றுமையான வாட்ஸ்அப் சமூக அணுகலையும் பெறுவார்கள்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது: 8072 799 983 / 90806 09808

அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

முன்பதிவு அவசியம்: www.editn.in



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அரசு போக்குவரத்து பணிமனையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், புதிதாகக் கட்டப்பட்டுள்ள போக்குவரத்து கழக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஆகியோர் தங்குவதற்கான ஓய்வுக் கூடம் கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 20.01.2025 அன்று திறந்து வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, பொது மேலாளர் (கு.அ.போ.க.) கே.முகமது நாசர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில் பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான முனைவர் சி.பிரதீப் முன்னிலையில் நடைபெற்றது. பொறியாளர் அணி அமைப்பாளர் என்.கார்த்திகேயன் வரவேற்புரையில் துணை அமைப்பாளர் செம்பியன் நன்றி உரையாற்றினார். கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், மாநகர பொறியாளர் அணி நிர்வாகிகள் தேர்வுக்கு QR code மூலம் பதிவு செய்து நேர்காணல் நடத்தி நிர்வாகிகள் நியமனம் செய்யவும் அதிக அளவில் உறுப்பினர் சேர்க்கை செய்யவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் கனக செந்தில்நாதன், ஆர்.வி.ராம்சிங், கே.நிரஞ்சன், கே.பாண்டுரங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (21.01.2025) வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் பயிர் காப்பீட்டுத் திட்டம் 2024–2025ஆம் ஆண்டின் திட்ட செயல்பாடு மற்றும் புயல் / மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமரவேல்பாண்டியன், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை இயக்குநர் எஸ். கணேஷ், காப்பீட்டு நிறுவன உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.